1358

போதனா விஷய பூங்கொத்து

மாதமொருமுறை மலரும்.

Editor & Publisher:

Rev. Fr. A. LOURDUSWAMI, B.A., L.T.,

R. C. Secondary Training School, Trichinopoly.

செ... **15** செப்டம்பர் **1941** மலர் **3**

...றை பாடசாலை, திருச்சினாப்பள்ளி.

தனிப்பிரதி அணா 1¼.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
22 SEP 1941
MADRAS

JC
NIIPP
N41.32.3
182296.

BODHANA VISHAYA POONGOTHU
Magazine
of
Educational Topics & School Methods.

பொருளடக்கம்

		பக்கம்
1.	பத்திராதிபர் குறிப்பு	57
2.	வாழ்த்துப்பா	58
3.	சென்னை கல்வி இலாகா அறிக்கை	59
4.	ஆசிரிய உலகம்	60
5.	அறநெறித்தொடர்	63
6.	பாடக் குறிப்பு	65
7.	இதுவும் ஒரு நல்ல வழிதான்	67
8.	உங்களுக்குத் தெரியுமா?	70
9.	இலக்கணப் பகுதி	71
10.	நமது சரடு	74
11.	விவசாயப் பகுதி	77
12.	விடுகவி	78
13.	யுக்திக் கணக்கு	78
14.	சிறுவர் நடித்தலுக்கேற்ற ஓர் நாடகம் ...	79
15.	செல்லம் எயிடைட் ஆசிரியர்களின் சங்கம் ...	81
16.	தென்னிந்திய முதியோர் கல்வி சங்கம் ...	82
17.	யோசனைக் கணக்கு விடைகள்	83
18.	நம் பாடசாலை நிகழ்ச்சிகள்	85
19.	பாலர் ஸங்கீதம்	87

Imprimatur: ✠ JAMES,
Bishop of Trichinopoly.

Rates of Advertisement

PERIOD	HALF PAGE			FULL PAGE		
	Rs.	As.	Ps.	Rs.	As.	Ps.
1 Month	4	0	0	7	8	0
3 Months	11	0	0	20	0	0
6 Months	20	0	0	35	0	0
1 Year (11 Issues) ...	30	0	0	55	0	0

Editor & Publisher:
"BODHANA VISHAYA POONGOTHU" Trichinopoly.

ஏஜெண்டுகள் தேவை! ஏஜெண்டுகள் தேவை!!

போதனா விஷயப் பூங்கொத்து

கோத்து 32] **15 செப்டம்பர் 1941** [மலர் 3

பத்திராதிபர் குறிப்புகள்

சென்ற மாதத்திய யோசனைக் கணக்குகளுக்குப் பலர் விடையளித்ததைப் பாராட்டி மகிழ்வுறுகின்றோம். அன்னவர்களின் பெயர்களை மற்றோரிடத்திற் காண்க. ஆயினும், மற்றவர்களுடைய விடைகள் நமது பத்திரிகை விஷயங்கள் அச்சுக்குப் போனபிறகு வந்து சேர்ந்தமைபற்றி அப்பெயர்களையும் சேர்க்க இயலவில்லை.

நிற்க, இனிமேலாக நமது பத்திரிகைக்கு விஷயதானம் புரியவும், விடைகள் அளிக்கவும் விரும்புவோர், முன் மாதம் 20-ம் தேதிக்குள் விஷயங்களை அனுப்பிவிடும்படி கேட்டுக் கொள்ளுகிறோம். அதாவது, உதாரணமாக: செப்டம்பர்-மீ 15-ம் தேதியில் வெளியாகும் நமது **பூங்கோத்தில்** விஷயத்தைப் பிரசுரிக்க விரும்புவோர், அதை ஆகஸ்ட் மாதம் 20-ம் தேதிக்குள் நமக்கு வந்து சேரும்படி அனுப்பியிருக்கவேண்டுமென்பதாம்.

* * * * * * * * *

நமது பாடசாலை தினம் (Our School Day)

அடுத்த அக்டோபர்-மீ 10-ம் தேதி முதல் 13-ம் தேதி வரை நமது பாடசாலை தின வைபவங்கள் நடைபெறும். அவ்வமயம் நம் பாடசாலை **கல்வி கண்காட்சியும்** (Educational Exhibition) நடத்தப்படும். ஆகவே, நம் பழைய மாணவர்கள்

ஷை கண்காட்சிக்குரிய காட்சிப்பொருள்களை அக்டோபர்-மீ 6-ம் தேதிக்குள் அனுப்பிக் கண்காட்சியைச் சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறோம். அன்றியும், நாம் ஏற்கனவே தெரிவித்துள்ளபடி இவ்வருஷம் T. S. L. C. பரீட்சையில் முதன்மையாகத் தேறியுள்ள நமது [illegible]ழய மாணவர்களும் தத்தமக்குரிய **போன் போறித்த வெள்[illegible]ப் பதக்கங்களை** ஷை பாடசாலைத் தினக்கொண்டாட்டத்தன்று (11—10—'41) இங்கு பெற்றுக் கொள்ளுவார்களாக.

வாழ்த்துப்பா

(G. சூசைமாணிக்கம், H. M., அச்சங்குளம்.)

1. மங்களச் சின்னரோமை
 மாநகரென்றே போற்றப்
பொங்குபல் வளமு மோங்கிப்
 பொலிசிரபுரத்தில் ஒவ்வோர்
திங்களும் தோன்றி மாந்தர்
 செழுமணங் கமழ வீசும்
பங்கமில் பூங்கொத்தே நீ
 பல்லாண்டு வாழி! வாழி!

2. நன்றியை மறத்தல் தீதா
 நவின்றனர் புலவர் மண்மேல்
அன்று உன் அம்கரத்தில்
 அமைவுடன் யான் வளர்ந்து
இன்று நல் உலகம் போற்றும்
 இகபரக் கல்விதன்னைத்
தின்று நான் சுவைத் தவின்பத் திறமையை
 நினக்கே யீந்தேன்.

3. ஜெகந்தனிலிரண்டாண்டாகத்
 தெம்புடன் மறந்த என்னை
அகந்தனில் அன்பு பூண்டு
 அடியனேன் துயில் நீத்தும்மேல்
"தந்தை தாய்ப்பேண்" என்றுன்ற
 தரும நூல் உணர்த்த வந்த
[illegible]மலரே! என்றும் கனிவுடன்
 வாழ்க! வாழ்க!!

தமிழ்நாடு ஆவணக் காப்பகம் சென்னை-600 008
182296
JC
[illegible]/NHAP
N41.[illegible]

சென்னை கல்வி இலாகா அறிக்கை

(Fort St. George dated 19-8-1941 page 658.)

Training School Leaving Certificate Examination March 1942–for Higher Elementary Grade.

எலிமெண்டரி ஹையர் கிரேடுக்கு அடுத்த **T. S. L. C.** பரீட்சை :—1942-ம் வுல மார்ச்சு-மீ 18-ம் தேதியிலிருந்து தொடர்ந்து, போதனுமுறைப் பாடசாலைகள் உள்ள ஸெண்டர்களில், ஷை பரீட்சை ஷை கிரேடுக்கு நடைபெறும்.

எலிமெண்டரி லோவர் கிரேடு (Elementary Lower Grade) ஸர்ட்டிபிக்கேட் பெற்றுள்ளவர்கள், மீண்டும் போதனு பயிற்சி பயிலாமலே, ஹையர்கிரேடு பரீட்சை எழுதித் தேறி, ஹையர் கிரேடு ஸர்ட்டிபிக்கேட் பெற்றுக்கொள்ள அனுமதிக்கப் படுவார்கள். இப்பரீட்சைக்கு உரிய கட்டணம் ரூ. **3.**

ஷை கட்டணத்துடன் பரீட்சை மனுக்களும் (Application) அந்தந்த கல்வி அதிகாரிகளின் மூலமாய் 1941, ஸெப்டம்பர்-மீ 30-ம் தேதிக்குள் சென்னைக்குப் போய்ச்சேரும்படி அனுப்பப் படவேண்டும். ஆகவே பரீட்சை எழுதப்போகும் மனுதார்கள், தங்கள் தங்கள் கல்வி அதிகாரிகளிடம் ஷை செப்டம்பர்-மீ 30-ம் தேதிக்கு **1** வாரத்திற்கு முன்னதாகவே செலுத்தவேண்டிய கட்டணத்தைச் சேர்த்துவைப்பது அவசியமாகும் என்பதை அறியவேண்டும்.

டைரேக்டரது சுற்றறிக்கை :—(Proceedings R. O. C. No. 111– E/40. dated 30-7-41 of the D. P. I., Madras.)

ஷை சுற்றறிக்கையின்படி, ஹையர் எலிமெண்டரி பாடசாலைகளில் படிக்கும் VI, VII, VIII வகுப்புப் பிள்ளைகளின் பாடசாலை ஆஜர் நாட்களின் புள்ளி விவரம் பின்வருமாறு :—

VIII வகுப்புப் பிள்ளைகள் மொத்தம் வேலைசெய்யும் பாடசாலை நாட்களில் (Working Days) 75%-க்குக் குறையாமல் ஆஜராய் இருத்தல் வேண்டும்.

VI, VII வகுப்புப் பிள்ளைகள் வேலைசெய்யும் பாடசாலை நாட்களில் 60%-க்குக் குறையாமல் ஆஜராய் இருத்தல் அவசியமாகும்.

ஆசிரிய உலகம் 2

'பெண் கல்வி'

(M. V. Rajendran)

'அடுப்பூதும் பெண்களுக்குக் கல்வி ஏன்?' என்று ஒரு காலம் பிரபல தர்க்கவாதிகள்கூடக் கூசாமல் பொது மேடைகளில் ஏறிப் பகிரங்கமாய்ப் பறைசாற்றிய காலமெல்லாம் மலையேறிப்போய்விட்டது. பெண் கல்வியின்மீது அவ்வளவு சிரத்தையெடுத்துக்கொள்ளாத கல்வி ஸ்தாபனங்களும் மேல் அதிகாரிகளும் கண்விழித்துவிட்டார்கள். நாட்டின் முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டையாய் இருப்பவர் கல்வி மணமற்ற மங்கையரே என்பது வெள்ளிடை மலைபோல் துலங்குவதாயிற்று. இனியும் ஆரம்ப ஆசிரியர்களாகிய நாம் கண்மூடி இருத்தல் நன்றோ? சொல்மின்!

ஈண்டு, பெண் கல்வி என்று பேசப்புகுங்கால், பெரும்பான்மையோரின் மனத்தில், உயர்தரக் கல்லூரிகளில் பயின்று உடலை மினுக்குவதிலேயே முனைந்து நின்று காலை மாலை வெவ்வேறு வகைக் கோலப்புடவைகளைச் சாலப்புனைந்து, மாலை நேரம் சாலையோரம் உல்லாசமாய் உலாவச்செல்லும் பெண்மணிகளின் தொகையை அதிகரிப்பது என்ற எண்ணம் ஒருவேளை ஊசலாடலாம். மன்னிக்கவும், இவர் பெரிய ஞானிபோல் பிதற்றுகிறார் என்று பேசவேண்டாம். பெண்ணென்றால் கண்ணும் மயங்கு மன்றோ? ஆயினும் ஆங்கிலப் பிரபுவான ஜான் ரஸ்கின் (Ruskin) சொல்வதுபோல் பெண்களை அலங்காரத்துக்காக மட்டும் வைப்பதுதான் சரியாகத் தோன்றவில்லை என்றுதான் நானும் கூறுகின்றேன். நம் நங்கையர், நாணம், அச்சம், மடம், பயிர்ப்பு என்னும் நாற்குணமும் நாற்படையாகவும், ஐம்புலனும் நல்லமைச்சாகவும் வதனமாகிய மதியை வெண்கொற்றக்குடையாகவும் கொண்டு அரசுபுரியும் பெண்மை அரசுக்களாகத் துலங்க வேண்டுமென்பதே என் பேரவா. ஐரோப்பிய நாகரீகமானது இந்தியருக்கு உரித்தாகிய குல ஒழுக்கங்களைக் குலைத்தல்கூடாது. குல ஒழுக்கம் என்னும்போது குருட்டாட்டமான கொள்கைகளை நான் கூறுவதில்லை. ஆனால் ஆசாரம், அன்பு, அடக்கம், மரியாதை என்னும் நற்குணங்களையே சாற்றுகிறேன். இங்குப் பெண் கல்வி என்று யான் கூறப்புகுந்தது உயர்தரக் கல்வியை அல்ல; ஆனால் ஆரம்பக்கல்வியையே. அதுவே நம்முடன் சம்பந்தப்பட்டது.

பெண்களுக்கு ஆரம்பக் கல்வி அத்தியாவசியமாவென்று இக்காலம் ஒருவன் கேட்டால் நீங்கள் உங்களையறியாமலே சிரித்து விடுவீர்கள். பெண்களின் மகிமை பெரிது.

“ மங்கையராகப் பிறப்பதற்கே—நல்ல,
மாதவஞ் செய்திடவேண்டுமம்மா ! பங்கயக் கைநலம்
பார்த்தல்லவோ—இந்தப், பாரில் அறங்கள் வளருமம்மா !
நீதிநெறி நில்லா வம்பருமே—நல்ல, நேர்வழி வந்திடச்
செய்பவரார்? ஓதியமான மிழந்தவரை—உயர்,
உத்தமராக்க முயல்பவரார் ?
ஆவி பிரியுமவ்வேளையிலே—பக்கத் தன்போட கலாதிருப்ப
வரார் ? பாவி யமனும் வருத்திடாமல்—ஈசன்
பாதம் நினைத்திடச் செய்பவரார் ? ” என்று

நம் காலக் கவியாகிய தேசிகவிநாயகம்பிள்ளை பெண்களைப் பெருமையுடன் போற்றி இருக்கின்றார். இவ்விதம் ஓர் ஆண் மகனுடன் குடும்பத்தில் சரியொத்த பொறுப்பை வகிக்கும் பெண் அறிவற்றவளாயின், அந்தோ பரிதாபம்! வாழ்க்கையாகிய வண்டியை இழுத்துச்செல்லும் தம்பதிகளாகிய இருவரில் ஒருவர் குருடராயின் எங்ஙனம் அவ்வண்டி சன்மார்க்கமாகிய அறநெறியைக் கடைப்பிடித்தொழுகுவது? தேசச் சேவை, சமூக முன்னேற்றம், ஒற்றுமை, சகோதர வாஞ்சை, வாக்குரிமை (Voting) என்னும் உயர்ந்த, பரந்த நோக்கங்களோடு தேசம் பிணைபட்டிருக்கும் இக்காலம் நம் வீட்டுப்பெண்மணிகள் அவர்கள் பாட்டன் பூட்டன் காலத்துள்ள தீண்டாமை, கல்விக்கழகம் வேண்டாமை, அறியாமை, தன்னலம் ஒழியாமை, பிறன்மனை மிதியாமை இவைபோன்ற இன்னும் பல்வேறு ஆமைகளைத் தம் உள்ளமாகிய கருவோலத்தில் (Bank) பத்திரமாய்ப் பாதுகாத்து வருவார்களாயின் அவர்களை மணந்த மணவாளர் எவ்வழி! ‘மனைவி எவ்வழி, அவ்வழி கணவனும்’ என்பதுதான் தற்கால நாகரீகத்தின் மகிமையாயிற்றே. அப்படியிருக்க, அன்புருவாய், அகத்தின் அணிகலனாய், வீட்டை இன்னகையால் ஒளி செய்பவளாய் அமைந்து விளங்கும் மடக்கொடியானவள் வாழ்க்கைப் பயனையடைய, சன்மார்க்கத்தில் ஒழுக, உலக சமாச்சாரங்களை வாசித்தறிய ஆரம்ப அறிவாவது பெற்றிருப்பது அவசியமன்றோ !

ஆரம்ப அறிவென்பது ஐந்து வகுப்பாவது தொடர்ந்து கற்று அடைந்த அறிவென்பது இப்போதுள்ள கொள்கையா

யினும் இன்னும் நாட்கள் பல சென்றால் மேனுட்டார் கொள்கைக்கொப்ப எட்டாவது வகுப்பு வரையுள்ள படிப்பாகும் என்பது எனது நம்பிக்கை.

நாட்டின் முன்னேற்றத்துக்கு அடிப்படையாக இருக்க வேண்டியவர் தாய்மாரே. கல்வி மணமற்ற தாய்மார் தம் மக்கள் கல்விபெற முட்டுக்கட்டையாயிருப்பர். கல்வியறிவுபெற்ற தாயோ சிறுபத்திலேயே பாலர்களை நல்ல திடகாத்திரமுடையவர்களாயும், தீக்ஷண்ய புத்தியுடையவர்களாயும், நற்குணங்களில் சிறந்து விளங்குபவர்களாயும் ஆக்குவதற்கு முயற்சிப்பாள். இது பற்றியே தற்காலக் கல்வி இலாகா தலைவர் மிஸ்டர் ஸ்டாத்தும் துரையவர்கள் பெண் கல்வியை விருத்திசெய்ய முயற்சித்துள்ளார்கள். அவர் ஆற்றியுள்ள சொற்பொழிவைச் சென்ற இதழில் நீங்கள் வாசித்தறிந்திருப்பீர்கள். வீட்டு வேலைக்காகவோ அல்லது காட்டு வேலைக்காகவோ பெண்கள் தேவையாயிருப்பின் பையன் அந்த வேலையைச் செய்யட்டும், பெண்ணைப் பள்ளிக்கனுப்புங்கள் என்று அவர் வற்புறுத்திக் கூறுகின்றார். இதையே திருச்சி ஜில்லாக் கல்வித் தலைவர் நமது பள்ளி ஆசிரிய மாணவர் கூட்டத்தில் இன்னும் வற்புறுத்திக் கூறியுள்ளார். இப்போது நடைபெற்றுவரும் ஆரம்பப் பாடசாலைகளில் அவைகள் அமைந்துள்ள சுற்று வட்டாரத்தில் இருக்கும் பள்ளிபோகும் வயதுள்ள பெண்களில் $\frac{1}{4}$ பங்கும் இனிமேல் அங்கீகாரம் வாங்கும் பாடசாலைகளில் $\frac{1}{2}$ பங்கும் குறைந்தபட்சமாக வாசித்துவரவேண்டும். அப்படியில்லையாயின் சர்க்கார் உதவி குறைக்கப்படும் அல்லது பள்ளிக்கூடம் திறமையற்றது என்று கருதப்படும், என புதிய ஒரு சட்டம் கூடிய சீக்கிரம் அமுலுக்கு வரும் என்று அவர் சொன்னர்.

ஆகவே ஆரம்ப ஆசிரியர்களாகிய நாம், தற்காலத்தும், பிற்காலத்தும் நமது தலையில் சுமத்தியுள்ள பாரம் பெரிது ஆயினும் அதன் மகிமையை உணர்வோமாக. நம் தாய்நாட்டின் இரட்சண்யத்துக்கு நாமே அடிகோலவேண்டும். ஆகவே தியாகபுத்தியுடன் முனைந்து நின்று நம் உபாத்திமைத் தொழில் சிறப்புற்று செழித்தோங்கி நிற்கப் பிரயாசையெடுப்போமாக. கடவுள் அருளும் நம்முடன் என்றும் நிலைபெற்று நிற்குமாக.

அறநெறித்தொடர்

(M. A. S. Udayar)

(கொத்து 31, மலர் 12, 325-ம் பக்கத் தொடர்ச்சி.)

44. சற்குணனுயிரு
45. சாதுவின் சொற்கேள்
சிறுவரை வதையேல்
சீர்பெற நில்
சுத்தம் விரும்பு
சூசைமாதவர்ப் பணி
50. செறுவினைப் பேண்
சேசுவுக் கடிமைசெய்
சையமொத்துவாழ்
சொலத்தகாதன வொழி
சோதனைக்கிடங்கொடேல்
55. சௌரியம் போற்று
ஞயவழி நில்
ஞானம் பெருக்கு
ஞிமிறெனை முயல்
ஞெண்டுபோலுணவமை
60. ஞேயரை மறவேல்
ஞொள்குதலொழி
தன்னயம் விரும்பேல்
தானம்பல செய்
திரவியம் போற்று
65. தீயார் கூட்டொழி
துன்மதி கூறேல்
தூயவனுயிரு
தெய்வம் வழிபடு
தேட்டம் பெருக்கு
70. தைப்பனி நில்லேல்
தொறுக்குலம் பேண்
தோதகம் பேசேல்
தௌவையர்க்குதவு
நல்லவர் சொற்கேள்
75. நாவலர்ப் பழியேல்
நினைப்பறிந் தொழுகு
நீதி கடைப்பிடி
நுண்ணறிவினர்ச்சேர்
நூனெறி நில்
80. நெற்போர் புரி
நேரிய வழிச்செல்
நைச்சியம் பேசேல்
நொந்தார்ப் போற்று
நோன்பு கடைப்பிடி
85. நௌவிபோல் மிரளேல்
பற்றற்றொழுகு
பாத்தூண் விரும்பு
பிறர்பொருள் விரும்பேல்
பீழையகற்று
90. புறமொழி கூறேல்
பூமணம் போலிரு
பெற்றோர்ப் பேண்
பேதுற்றுழலேல்
பைம்புலம் போற்று
95. பொய்ம்மொழி கூறேல்
போர்த்தொழில்விரும்பேல்
பௌவமாடேல்
மரியை வாழ்த்து
மாலற்றொழுகு
100. மிடிபிறர்க்குறையேல்
மீப்புகழ் விழை
முற்றுந் தெரிந்துரை

(அரும்பதவுரை)

50. செறு = நெல்விளைகழனி.
52. சையம் = பூமி.
55. சௌரியம் = வீரம்.

56. ஞயவழி = நல்வழி.
58. ஞிமிறு = வண்டு.
59. ஞெண்டு = நண்டு.—[நண்டு மாரிக்காலத்திலேயே தனக்கு வேண்டும் நீர் முதலிய உணவுகளைக் கோடைகாலத்திற்கும் போதியவாறு தன் சிறு வளையிலேயே அமைத்துக்கொள்ளுதல்போல.]
60. ஞேயர் = சினேகிதர்.
61. ஞொள்குதல் = சோம்பியிருத்தல்.
69. தேட்டம் = செல்வமுதலியன.
71. தொறுக்குலம் = பசுக்கூட்டம்.
73. தௌவையர் = தாய் தமக்கை முதலியோர்.
84. நோன்பு = விரதம்.
85. நௌவி = மான்.
87. பாத்தூண் = பகிர்ந்துண்டல்.
89. பீழை = துன்பம்.
94. பைம்புலம் = விளைநிலம்.
97. பௌவம் = கடல்.
99. மால் = மயக்கம்.
100. மிடி = வறுமை.
101. மீப்புகழ் = மேலானபுகழ்.

உபாத்தியாயர் :—ஜேவியர், புயல் காற்று என்றால் என்ன ?

ஜேவியர் :—அவசரமாகப் போகும் காற்றுக்குப் புயல் காற்று என்று பெயர்.

* * * *

உபாத்தியாயர் :—(பையன்களைப் பார்த்து) நாம் வசிக்கும் இந்தியா நாற்புறமும் எதனால் சூழப்பட்டிருக்கிறது ?

மாணுக்கன் :—(விரைவில் எழுந்து) கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு ஸார்.

K. B. Duraisamy

பாடக் குறிப்பு

(R. Pitchai Pillai)

வகுப்பு : IV. பாடம் : சுகாதாரம். நேரம் : 35 நிமிஷம்.

நோக்கம் : சுத்தமான பழக்கவழக்கங்கள் சுகமான வாழ்வைத் தரும் என்பதைப் புலப்படுத்துதல்.

உபகரணங்கள் : மேல்கண்ட நோக்கத்திற்கேற்ற சுகாதாரப் படங்கள் (சுகாதார இலாகா பிரசுரங்கள்).

பீடிகை : சுகவாழ்க்கைக்கு ஏதுவான இடச்சுத்தம், தேகசுத்தம், உடைச் சுத்தம் இவற்றைப்பற்றிப் பிள்ளைகளுடன் சம்பாஷித்து, நோக்கத்தை வெளியிட்டுப் பாடத்தை ஆரம்பிக்கவும்.

விஷயம்	முறை
மலஜலங் கழித்தபின் சுத்தம் செய்துகொள்ள எப்போதும் சுத்த ஜலத்தையே உபயோகிக்கவும்.	அசுத்த ஜலமுள்ள இடங்களையும், அந்த ஜலத்தை உபயோகிப்பவர்களைப்பற்றியும், அதனால் அவர்களுக்கேற்படும் தீங்குகளைப்பற்றியும் பிரஸ்தாபித்து விளக்கவும் (தேவையான படங்களையும் காட்டுக).
காலையில் மாத்திரமின்றி இரவில் படுக்குமுன்னும் பற்களைச் சுத்தம் செய்துகொள்ளவும்.	பற்களிற்கிடையில் சிக்கியிருக்கும் உணவுப்பொருள்கள் அடிக்கடி வெளியாகாததால் ஏற்படும் சில கெடுதல்களைக் கூறி விளக்கவும்.
ஒவ்வொரு நாளும் தலையை வாரி அழகாய் வைத்துக் கொள்.	பேன், அழுக்கு, மயிர்ச் சிக்கல் இவற்றால் தேகசுகம் கெடுவதை சம்பந்தப்படுத்துக. (படங்களையும் காட்டி விளக்கவும்.)

விஷயம்	முறை
சாப்பிடுமுன் கைகளை அலம்பிச் சுத்தஞ் செய்துகொள்; வீட்டினுள் புகுமுன் பாதங்களை அலம்பிச் சுத்தஞ்செய்துகொள்.	கைகளில் அழுக்கு சேருவதைப்பற்றியும், அவ்வழுக்கு நாம் சாப்பிடும் உணவுடன் கலப்பதால் ஏற்படும் தீமையைப்பற்றியும் சம்பாஷிக்க.
ஒவ்வொரு நாளும் படுக்கையை வெயிலில் உலர்த்தி உபயோகிக்கவும்.	படுக்கைகளில் மூட்டுப்பூச்சி, எறும்பு முதலிய பூச்சிகள் அடையாவண்ணம் தடுக்கவும், உமிழ்நீர், அழுக்கு முதலியன நீக்கவும், சூரியவெப்பம் பிரயோஜனப்படுவதைப்பற்றி எடுத்துக் கூறவும் (படங்களையும் காட்டுக).
சுகாதாரப் பழமொழி சுத்தம் சுகந்தரும்.	பழமொழியை எழுதி வாசிக்கச்செய்க.

க. ப. சு.

சுத்த ஜலத்தில் கைகால்களை அலம்புக.
காலையிலும் மாலையிலும் பற்களைச் சுத்தம் செய்க.
தலையை அழகாய் வாரிக்கொள்.
கைகழுவிச் சாப்பிடு; கால்கழுவி வீட்டிற்குள் புகு.
படுக்கையை வெயிலில் உலர்த்திப் படு.

பரீக்ஷை

இரவிலும் பற்களைச் சுத்தம் செய்யவேண்டும். ஏன்?
தலையை வாரிக்கொள்ளாவிடில் நேரிடும் தீமைகள் யாவை?
நாம் படுக்கும் படுக்கையை எவ்வாறு வைத்துக்கொள்ளத்தகும்?
இப்பாடத்தினால் நமது சுகவாழ்க்கைச் சம்பந்தமாய் என்னென்ன விஷயங்களைக் கற்றுக்கொண்டாய்?
சுகாதாரப் பழமொழி யொன்று கூறுக.

இதுவும் ஒரு நல்ல வழிதான்

(S. E. Arul Raj)

ஓர் ருசிகர சம்பாஷணை

சம்பூ: ஏங்க...சார்வாள்...நீங்களாவது ரூ. 15 சம்பளம் வாங்கிறீள். நான் ரூ. 20 வாங்கிறேன். நீங்கோ கொஞ்சமும் கஷ்டமில்லாமலே குடும்பத்தை நடத்திக்கிட்டு சமாளிச்சுக்கிட்டு வறேயளே. எப்படிவறேள்? நம்மாலே அப்படி முடியலிங்கலே.

ராஜு: என்ன சம்பூ. உனக்குத் தெரியாததா. எங்கள் மேனேஜர் எனக்குக் கொடுப்பது ரூ. 15 தான். இது என் குடும்பத்திற்குப் போதுமா? எல்லாம் நம்மிடத்திலேதான் இருக்கு. வேறு படிப்பு படித்திருக்கிறதினுலே சிறிது சமாளித்துக்கொள்கிறேன்.

ச.: அப்படி...யென்னு வேறே படிப்பு படிச்சுருக்கிறீங்க?

ரா.: நான் போதனுமுறை பயிலுமுன்னமே விவசாயத் தொழிற்சாலையில் சேர்ந்து படித்திருக்கிறேன்.

ச.: அப்படின்னு?

ரா.: அதாவது விவசாயம் செய்யும் முறையும், சிறிய கைத் தொழில்களும் அங்கு சொல்லித் தருவார்கள்.

ச.: ஆமா! அங்கே என்னென்ன சொல்லித்தர்ராங்க?

ரா.: உயர்ந்த முறையிலே விவசாயம் செய்யவும், பால், கிருஷி, கோழிப்பண்ணை, தேனீ வளர்த்தல், காய்கறி, பழத் தோட்டம்போட்டு நடத்தவும், நெசவு, பாய் நெசவு, கயிறு திரித்தல், நூல் நூற்றல் முதலியனவும் சொல்லிக்கொடுக்கிறுர்கள்.

ச.: இம்பிட்டும் படிச்சேங்கிறியலே, இதிலே நீங்க என்னத்தை செஞ்சுவாரீங்க? கொஞ்சம் அதை விளங்கும்படியா சொல்லுங்களேன்—நானும் தெருஞ்சுக்கிறேன்!

ரா.: நாம் வாங்குகிற சம்பளம் குறைவானதினுலே நாம் ஏதாவது ஒன்று அல்லது சில உபத்தொழில் செய்தோமானுல் நமக்கு உதவியாயிருக்கும்.

ச.: என்னுங்க?.....உபதொழிலா?......இதைப்பற்றிக்கூட போதனு விஷயப்பூங்கொத்திலே கொஞ்ச நாளைக்கு முன்னுலே

எழுதியிருந்தாங்களே. எங்க வாத்தியாருகூட வாசித்துக்காட்டினறு...ம்...ம்...சொல்லுங்க!

ரா.. எனக்குச் சிறிது நிலம் உண்டு. லீவு நாட்களில் அந்நிலத்தை வெட்டிப்பண்படுத்தி காய்கறி விதைகளைப்போட்டு விடுவேன். வீட்டிலுள்ளவர்கள் தினம் அதற்குத் தண்ணீர் விட்டுக் கவனித்து வருவார்கள்.

ச.: நீங்ககூடவா மண்வெட்டி பிடிச்சு வெட்டுவிங்க!

ரா.: ஏன் மண்வெட்டி பிடித்து வெட்டினல் என்ன? நான் படிக்கும் காலத்தில் பள்ளிக்கூடத்திற்கு முன்னல் தோட்டம் போட்ட பழக்கம் இருக்கிறது.

ச.: ...ம்...சரி சொல்லுங்க!

ரா.: அந்தத் தோட்டத்திலிருந்து வீட்டுக்கு வேண்டிய காய்கறிகள் வந்துவிடும். சில மரங்களும் அந்த இடத்தில் வளர்க்கிரும். அதோடு நல்ல ஜாதிக் கோழிகள் 3 வாங்கிவிட்டேன். அவைகள் பத்தாகப் பலுகி இருக்கின்றன. வீட்டிலுள்ள தவிடு, தானியங்களைப்போட்டு வீட்டிலுள்ளவர்களே கவனித்து வருகிருர்கள். இப்படி வளர்ப்பதிலே தினம் சராசரி, 7, 8 முட்டைகள் கிடைக்கின்றன. தினம் விலையாகிவிடுகிறது. சில சமயங்களில் அடை வைத்துக் குஞ்சுகள் சேகரித்துக்கொண்டு, சிற்சில சமயங்களில் சமயோஜிதம்போல் சேவல்களை கிரயத்துக்கும் கொடுக்கிறேன். இதிலிருந்து வரும் வரும்படியை எனது சில்லரைச் செலவுகளுக்கு வைத்துக்கொள்ளுகிறேன். என் வீட்டின் திண்ணைக்குள் சொற்பக் கிரயத்தில் ஓர் குழித்தரி போட்டிருக்கிறேன். வீட்டிலுள்ள பெரியோர்களும் பிள்ளைகளும் ஓய்வு நேரங்களில் குழாய்களில் நூல் சுற்றி வைத்துவிடுவார்கள். எனக்குக் கிடைக்கும் ஓய்வு நேரங்களில் பாவுபோட்டு வீட்டிற்கு வேண்டிய துண்டு, வேஷ்டி, போர்வை முதலியவற்றை நெய்துகொள்வேன். சில சமயங்களில் விற்றுவிடுவேன். இவ்வாறு சிறிய தொழிலை எனது உபத்தொழிலாக நடத்தி வருவதால் ஒருவாறு சமாளித்துக்கொண்டு வருகிறேன்.

ச.: ஆமா! இம்பிட்டுத்தான... இன்னும் என்னமும் செய்யப்போறியலா?

ரா.: பால் மாடு வளர்ப்பதிலும் அதிக லாபம் உண்டு. ஒன்று வாங்கி வளர்க்கவேண்டுமென்று நினைத்திருக்கிறேன். கூடிய சீக்கிரம் வாங்கி அதை என் தாயாரிடம் ஒப்படைப்பேன்.

ச.: நீங்க சொன்னதுல்லாம் சரித்தானுங்க. எங்க வீட்டிலே அப்படி இல்லயிங்களே. நிலங்கூட கொஞ்சம் இருக்கு. இப்படியல்லாம் செய்யணும்னு யாரு கண்டா? வீட்டிலே உள்ளவுகளுக்கோ சமைக்கிறதும் தூங்கிறதுந்தான் வேலையா யிருக்கு. நானும் இப்படி தொழிற்சாலையில் படிக்காமெ போனது முட்டாத்தனமா போச்சு.

ரா.: அதனுலென்ன! நீ துணி நெய்யாவிட்டாலும் மற்றதையாவது வைத்து நடத்திவா. உங்களுக்கு உதவியாயிருக்கும்.

ச.: ஆமாங்க...கோழி வளர்க்கிறேன்னு சொன்னீங்களே! என்ன ஜாதிக்கோழிங்க வாங்கியிருக்கிறீங்க?

ரா.: ஒயிட்லெக்கான், ரெட்ரோட் ஐபலண்ட், பிளாக் மைனுர்க்கா என 3 ஜாதி வாங்கியிருக்கிறேன். இது போதுமானது.

ச.: எங்க ஊரிலே எல்லோரும் விவசாயிகளாத்தானிருக்கிறுங்க! இப்படி உப தொழில்னு ஒருத்தரும் செய்கிறதில்லீங்க.

ரா.: இதன் அவசியத்தையும் அருமையையும் அவர்கள் அறிந்தாரில்லை.

ச.: இதெல்லாம் அவுங்களுக்குந் தெரியனும்னு எப்படி சொல்றது? யாரு எங்களுக்குச் சொல்லிக்கொடுப்பா.

ரா.: உங்கள் தாலுகாவிலுள்ள விவசாய டிமான்ஸ்டிரேட்டரிடம் (Demonstrator) கேட்டால் விவரமாகக் கூறுவார்.

ச.: ஏதோ இப்பச் சொன்னதுபோல இன்னம் உங்களுக்குச் சமயம் கிடைக்கும்போதெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாய்ச் சொல்லனுமுங்க. நீங்க சொன்னதும் ஓர் நல்ல வழிதாங்க! சரி...போயிட்டு வரேனுங்களா!

ரா.: ஏதோ நீங்கள் ஒரு உத்தியோகத்திலே இருந்திட்டாலும் இப்படி கஷ்டப்படுகி[illegible]தற்கு நான் சொன்னதுபோல் செய்து வந்தால் போதுமானது. ஆனல் உங்களை அண்டியிருக்கும் கிராமவாசிகளுக்கும் இதைப்பற்றிச் சொல்ல மறந்திடாதீர்கள். நானும் தெரிந்தவரை இன்னும் பலவித தொழில்களைப்பற்றி சொல்லுகிறேன். சரி போய் வாருங்கள்.

உங்களுக்குத் தெரியுமா?

(S. A. Renganathan)

1. ஈக்கள் எவ்வாறு தலைகீழாக நடக்கின்றன?

ஈக்கள் தலைகீழாக நடக்கமுடிவதன் காரணமென்னவெனில் ஒவ்வொரு பாதத்தின் முடிவின் மேற்பாகத்தில் சிறு மடிப்பு (pad) இருக்கிறது. ஒவ்வொரு பாதத்தின் நடுவில் குழையாக இருக்கிறது. ஈக்களின் பாதம் பூமியின் பரப்பிற்பட்டு அமுத்தப் பட்டபோது, காற்றில்லாத ஒரு நிலை (Vacuum) உண்டாக்கப் படுகிறது. ஈக்கள் வம்சத்தைச் சேர்ந்த பூச்சிகளுக்கு (Scale insects) மட்டுமே இரண்டு இறகுகள் உண்டு. அவைகள் எப் பக்கத்தையும் பார்க்கக்கூடும். ஏனெனில் அதன் ஒவ்வொரு கண்ணும் ஆயிரக்கணக்கான சிறுகண்களாலாகியது. இன்னு மற்ற கொசுக்களும், Grats என்ற பூச்சிகளும் ஈக்கள் வம் சத்தைச் சேர்ந்தவை. ஆனால் மாட்டு ஈக்களும் (Dragon fly) (May fly) என்ற ஈக்களும் இவ்வம்சத்தைச் சேர்ந்ததல்ல. ஏனெனில் அவைகளில் ஒவ்வொன்றுக்கும் இரண்டு ஜோடி இறகுகள் இருக்கின்றன.

2. கோபுரங்களில் மிகப் பெருமைவாய்ந்ததேது?

பூமியின்கண் உள்ள எல்லாக் கோபுரங்களிலும் மிகப் பெருமையும் கீர்த்தியையுமுடையது பைசா நகரத்து சாய்ந்த கோபுரமேயாம். இது முழுவதும் வெண்மையான பளிங்குக் கற்களால் கட்டப்பட்டு 179 அடி உயரமும் உடையது. அதா வது 15 மெத்தைகளையுடைய ஒரு கட்டிடத்தின் உயரத்துக்குச் சமானமாம். 1174-ம் வருஷத்தில் இதைக் கட்ட ஆரம்பித்து 1350-ல் முடித்தார்களாம். அவ்வளவு 176 வருஷங்கள் அதைக் கட்ட பிடித்தனவாம். அதன் அஸ்திவாரம் மிருதுவான பூமியி லும், மணலிலும் தாங்கியிருக்கிறது. முதல் மூன்று படிகள் கட்டிமுடித்தபின்னரே அக்கோபுரம் சிறிது சாய ஆரம்பித்தது. இப்போது ஒரு பக்கமாக $16\frac{1}{2}$ அடி சாய்ந்து இருப்பதாகத் தோன்றுகிறது. இப்போதுதான் சமீபத்தில் இத்தாலிய சர்க்கா ரால் அதன் அஸ்திவாரத்தைப் பலப்படுத்தப்பட்டது. அக் கோபுரம் அருகிலுள்ள பைசாவின் மேற்றிராசனக் கோவிலின் மணிகளை உடையது.

இலக்கணப் பகுதி

(J. J. Cardoza, Ovari.)

"க, ச, த, ப இயல்பாகுமிடங்கள்."

மிகத் தொன்மைவாய்ந்ததும் இனிமை வாய்ந்ததுமான பாஷை தமிழ்ப் பாஷையே. தமிழ் எனும் பதத்திற்கே இனிமை எனும் பொருளாகும். இப்பாஷையிலுள்ள இலக்கியங்கள் பல. தமிழ் ஓர் இயற்கைப்பாஷையாக இருந்தபோதிலுங்கூட சிற்சில சொற்களைச் சேர்த்து எழுதுகையில் ஒரு சிறு சங்கடம் ஏற்படுகிறது. ஆசிரியர்க்கும், மாணவர்க்கும் மற்றும் கட்டுரை எழுதுபவர்க்கும், அச்சாபீஸில் எழுத்துப்பிழை பார்ப்பவர்க்கும் பிரயோஜனப்படும்படியாக கீழ்க்காட்டியுள்ள "க, ச, த, ப இயல்பாக நிற்குமிடங்கள்" எனும் கட்டுரையை எழுதலானேன்.

1. எழுவாய்த் தொடருக்கு இடையில், க், ச், த், ப் என்ற எழுத்துக்கள் வரா.

உதாரணம்:

1. கழுதை கத்துகிறது.	3. தவளை தாவுகிறது.
2. தங்கை சிரிக்கிறாள்.	4. புலி பாய்கிறது.

2. விளிவேற்றுமையில் க, ச, த, ப இயல்பாகும்.

உதாரணம்:

1. பையா கொண்டுவா.	3. தம்பீ தொழு.
2. தங்காய் சொல்.	4. பெண்ணே பார்.

3. இரண்டாம் வேற்றுமைத் தொகையில் க, ச, த, ப இயல்பாகும்.

உதாரணம்:

1. தமிழ் கற்றான்.	3. துணி துவைத்தான்.
2. பெட்டி செய்தான்.	4. மலர் பறித்தான்.

4. மூன்றாம் வேற்றுமை உருபுகளாகிய ஒடு, ஓடு என்றவைகள் முன் க், ச், த், ப் இயல்பாகவே நிற்கும்.

1. பாலொடு+கலந்தான்; பாலோடு கலந்தான்.
2. மகனொடு+சேர்ந்தான்; மகனோடு சேர்ந்தான்.
3. தாயொடு+தங்கினாள்; தாயோடு தங்கினாள்.
4. தந்தையொடு+பேசினான்; தந்தையோடு பேசினான்.

5. அது, ஆது, அ என்னும் ஆறாம் வேற்றுமை உருபுகளின் முன் க, ச, த, ப இயல்பாகும். அ, ஆது பெரும்பாலும் செய்யுட்களிலே வரும்.

உதாரணம் :

1. எனது கண்.
2. மகனது செய்கை.
3. மனிதரது தொழில்.
4. மாணவரது புத்தகம்.

6. இயல்பாக வருகின்ற ஆறு, ஏழு முதலிய எண்ணுப் பெயர்கள் முன்னும் விகாரமடைந்துவருகின்ற ஒரு, இரு, அறு, எழு முதலிய எண்ணுப் பெயர்கள் முன்னும் 'க, ச, த, ப' இயல்பாகும்.

உதாரணம் :

1. ஆறு கற்கள்.
2. ஆறு சொற்கள்.
3. ஆறு தொழில்கள்.
4. ஆறு பறவைகள்.
5. ஏழு கள்வர்.
6. ஏழு செல்வர்.
7. ஏழு தொழில்.
8. ஏழு பிறப்பு.

ஒரு, இரு, அறு, எழு முதலியவற்றிற்கும் அவ்வகையான உதாரணங்களே.

7. வடமொழி என்று வழங்கும் சமஸ்கிருத சொற்கள் தமிழில் வருங்காலத்தில் அச்சொற்றொடர்களில் இடையில் க, ச, த, ப இயல்பாகும்.

உதாரணம் :

1. பாத கமலம்.
2. சந்திர சூடன்.
3. தேவ தூதன்.
4. ஆதி பகவன்.

8. வினைத்தொகையின் முன் க, ச, த, ப இயல்பாகும்.

(உ-ம்) சுடு + காடு ; சுடுகாடு.
எய் + சரம் ; எய்சரம்.
அழி + பொருள் ; அழிபொருள்.

9. எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல் எனும் அளவைகளுள் "உம்" தொக்கிவரும். இவ்வாறு தொக்கிவருங் காலத்தில் க, ச, த, ப மிகா.

(உ-ம்) ஒன்றே கால்.
சேரசோழர்.
இரவு பகல்

10, வன்தொடரல்லாத ஏனைய குற்றுகரங்கள் முன் க, ச, த, ப இயல்பாகும்.

(உ-ம்) வந்து கூறினான்.
மென்று தின்றான்.
எய்து கொன்றான்.

11. ஏகார, ஓகார இடைச்சொற்களின் முன் க, ச, த, ப இயல்பாகும்.

(உ-ம்) நானே கண்டேன்.
அவனே சிரித்தான்.
நீயோ சொன்னாய்.

12. தனை, அளவு, பல, சில எனும் பண்புப்பெயர்கள் முன்னும் அஃறிணைப் பலவின்பாற் பின்னும் வல்லினம் இயல்பாகும்.

(உ-ம்) இத்தனை காரியம்.
எவ்வளவு சிறப்பு.
பல தேசம்.
சில பேச்சு.

13. வன்தொடர்கட்குப் பின்னர் க, ச, த, ப இரட்டிக்கும். இரண்டாம் வேற்றுமைத் தொகையாயினும் இரட்டிக்கும்.

(உ-ம்) அடித்துக் கொன்றான்.
உனக்குத் தந்தான்.
அச்சுப் பிழை.

14. ஆக, ஆய் என முடியும் வினையெச்சங்கட்குப் பின்னர் க, ச, த, ப இரட்டிக்கும்.

(உ-ம்) அழகாய்க் கூறினான்.
அழகாகப் பேசினான்.
வேகமாய்ச் சென்றான்.

15. அந்த, இந்த, எந்த, அப்படி, இப்படி, எப்படி என்ற சொற்களுக்குப் பின்னர் க, ச, த, ப இரட்டிக்கும்.

(உ-ம்) அந்தக் கதை. அப்படிக் கேள்.
எந்தப் பாட்டு. எப்படித் தின்றான்.
இந்தச் சிறுவன். இப்படிக் கொன்றான்.

16. ஏழாம் வேற்றுமை இடப்பொருளை யுணர்த்தும் அங்கு, இங்கு, எங்கு, ஆங்கு, ஈங்கு, யாங்கு, ஆண்டு, யாண்டு, ஈண்டு எனும் மென்றொடர்க்குற்றியலுகரவீற்று இடைச்சொற்களின்முன் இரட்டிக்கும்.

(உ-ம்) அங்குக் கண்டேன்.
இங்குச் சென்றேன்.
ஆண்டுச் சொன்னான்.

நமது சரடு

(கொத்து 32, மலர் 2, பக்கம் 51-ன் தொடர்ச்சி.)

இவ்விதமாக அந்தநாள் கழிந்தது. மறுநாள் காலையில் எங்களூர் உபாத்தியாயருடன் வீண் காரியத்தைப்பற்றி நேரப் போக்கிற்காகத் தர்க்கித்துக்கொண்டிருந்தோம். அப்போது கட்டுரையின் ஞாபகம் வரவே, நானும் சவரிராஜனும் வேகமாக வீட்டிற்கு வந்தோம். நான் நமது சரடின் தொடர்ச்சியை எழுத ஆரம்பித்தேன். அவர் ஓர் நாவலை வாசிக்க ஆரம்பித்தார். அன்று சுமார் எட்டுப் பக்கங்கள் எழுதிமுடித்தேன். அதிகக் களைப்பாக இருந்தது. பௌண்டன் பேனாவை அப்புறம் வைத்து விட்டு "உஸ்...ஸ்...அப்பாட...என்ன சிரமம்" என்று சொல் லிக்கொண்டு நிமிர்ந்துபார்த்தேன். முந்தினநாளில் எமக்குக் கிடைத்த பூங்கொத்து மேஜையின்மேலிருந்தது. அதிலும், அதன் வெளி அட்டையின் நான்காவது பக்கம் மேல்புறமாக இருந்தது; அதில் ஓர் விசேஷம். அந்த மேல் அட்டையில் ஓர் விளம்பரத்தைக் கண்டேன். "Our Employment Bureau" என்று ஆங்கிலத்தில் பெரும் எழுத்துக்களால் எழுதப்பட்டிருந் தது. பின்னும் கீழே வாசித்தேன். பாடசாலை மானேஜர்கள் அநேகர் தங்களுக்கு, "ஹையர் எலிமெண்டரி கிரேட் போதனா முறை பயின்ற உபாத்திமார்கள் தேவை" என்று அந்த பீரோ வில் விளம்பரம் செய்திருந்தார்கள். உடனே எனக்கு ஓர் நல்ல யோசனை தோன்றிற்று. இந்த பீரோ நமக்கு நல்ல உதவி செய் தது என்று எண்ணிக்கொண்டு, பேனாவையும் பேப்பரையும் எடுத்தேன். ஓர் பாடசாலை மானேஜருக்கு விண்ணப்பம் (Application) ஒன்று எழுதினேன். அதில் எனது நண்பரைக் கையொப்பமிடச்செய்து, இருவரும் தபாலாபீசிற்குச் சென்று அதைத் தபால் செய்தோம்.

இவ்விதநாட்களில், நான் "சந்தோஷம்" என்ற பெய ருடன் ஓர் புஸ்தகம் எழுதினேன். அதை நூற்றுக்கணக்காகப் பிரசுரம் செய்து வியாபாரம் செய்துவந்தேன். அதன் விலை அணா ஒன்று: அதைப் பலர் வாங்கி வாசித்தனர். அப்போது அநேக வாலிபர்களும், பாடசாலை மாணவர்களும், மாணவிகளும், "இந்தா அணா ஒன்று...சந்தோஷம் கொடு" என்று கேட்டு என்னைக் கேலிசெய்துவந்தார்கள். பலர் உண்மையிலேயே சந்தோஷத்தை வாங்கி வாசித்தார்கள். சந்தோஷத்தில் எழுதப்

NU.326

பட்டிருந்த விஷயங்களை இன்னொருதினம் தெரிவிக்கிறேன். இவ் விஷயத்தைச் சரடு என்று நினைக்கவேண்டாம்.

பின்னும் நாங்கள் எங்களது விண்ணப்பத்தை அனுப்பிய மறுவாரத்தில், "சவரிராஜ் உடனே புறப்பட்டுவரவேண்டியது, எதிர்பார்க்கின்றோம்" என்று பதில் கிடைத்தது. உடனே, எனது நண்பரும், தம் பயணத்திற்குவேண்டிய முஸ்திப்புகளைச் செய்தார். மாலை நான்கு மணிக்குப் 'பஸ்' புறப்படுகின்றது. நேரமும் ஆகிவிட்டது. இன்னும் பத்து நிமிஷங்கள். மதுரையிலிருந்து 'பஸ்' வந்துசேர்ந்தது. உடனே சவரிராஜ் மூட்டை முடுச்சுகளை எடுத்துக் காரில் வைத்து ஏறினார். நானும் அவருக்கு உதவியாக இருந்து வழி அனுப்பிவிட்டேன். 'பஸ்' புறப்பட்டு வேகமாகச் சென்றுவிட்டது. பின்னர் நானும் வீடுதிரும்பினேன். வழியில் சில மாணவர்கள் "சார்...மிஸ்டர் கை, இந்தா அணா ஒன்று...சந்தோஷம் கொடு" என்று கேட்டார்கள். நான் இயற்கையாகவே அதிக வருத்தத்துடன் வந்துகொண்டிருந்தேன். மாணவர்கள் ஏளனம் செய்வதைக் கண்டவுடன் எனக்குக் கோபம் வந்தது. அடக்கிக்கொண்டு, ஓர் யோசனை செய்தேன் "பையன்களே இப்போது என்னிடம் சந்தோஷமில்லை, எல்லாம் தீர்ந்துவிட்டது...இப்போது துக்கம்தான் இருக்கிறது. அதை வாங்கி வாசியுங்கள். அதன் விலையும் அணா ஒன்றுதான்" என்றேன். பலர் யோசித்தனர். சிலர் "இந்தா அணா" என்று சொல்லிக்கொண்டு அணாவை நீட்டினார்கள். பசக்கென்று ஒருவனிடம் அணாவை எடுத்துக்கொண்டு, 'படீர்' என்று அவன் கன்னத்தில் ஓர் அறை கொடுத்தேன். அங்கு நின்றுகொண்டிருந்தவர்கள், "சபாஷ்...சரியான புஸ்தகம், எங்களுக்கு வேண்டாம்" என்று சொல்லிக்கொண்டு விரைந்து ஓடிவிட்டார்கள். அறை வாங்கிய பையன் "ஓ" வென்று அலறிக்கொண்டு அழுதான் "இதுதான் துக்கம் என்னும் புஸ்தகம்...ராகத்துடன், இன்னும் சப்தமாக வாசியும்" என்று சொல்லிக்கொண்டே வீடு வந்துசேர்ந்தேன். அன்றுதினத்திலிருந்து 'சந்தோஷம்' கேட்பதை விட்டுவிட்டனர்.

எனது ஆப்த நண்பர் வேறு ஊருக்குச் சென்றபின்னர் மற்றொரு நண்பர் வந்து கூடினார். இவரும் அமைந்த குணமுடையவர்தான். இவருடைய பெயர் 'மை'. இவரை 'மிஸ்டர் மை' என்று கூப்பிட்டு வந்தார்கள். இவருடைய முழுப் பெயர் புதுமை என்பது. இவரை ஓர் சமயம் ஜனங்கள், 'புதுமை

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
18226

பழையமை' என்று ஏளனம் செய்ய ஆரம்பித்தார்கள். ஆகையால் அவர் 'மை' என்றுமட்டும் பெயர் வைத்துக்கொண்டார். இருவரும் இமைப்பொழுதுகூட பிரியாத கூட்டாளிகளாக இருந்தோம். அப்போது ஜனங்கள் "மிஸ்டர் மையின் உதவியால் மிஸ்டர் கை அநேகக் கட்டுரைகள் எழுதியுள்ளார்" என்று பேசிக்கொள்வார்கள். ஏனென்றால் அவர் கட்டுரைகள் எழுத ஏராளமான உதவி செய்திருக்கின்றார். இது உண்மைதான் வெறும் சரடல்ல. வாசிக்கும் நண்பர்களும் இது உண்மைதான் என்று எண்ணுவார்கள்போலும். இது வெறும் சரடல்ல.

சவரிராஜ் உபாத்தியாயர், வேலையினிமித்தமாக கோவிலூர்க்குச் சென்ற இரண்டாவது வாரம் எனக்குக் கடிதம் எழுதினார். அக்கடிதத்தில் :

(சில செய்திகளுக்குப்பின்) திருச்சி ஆர். ஸி. ஸெக்கண்டரி போதனுமுறைப் பாடசாலைத் தலைமை ஆசிரியரும், போதனுவிஷயப் பூங்கொத்து பத்திராதிபருமான சங். **A. Lourduswami B.A.,L.T.** சுவாமிகளின் தயாளத்தின் மகிமைதான் என்னே! அன்னவரின் அயராத உழைப்பால் அப்பாடசாலை மென்மேலும் விருத்தியடைந்து வருகிறது என்பதற்குத் தடையுண்டோ! மற்றும் போதனு விஷய பூங்கொத்து ஓங்கி வளர்ந்து அழகிய பெரும் மலராக வெளி வருகிறது என்பதற்கு ஆக்ஷேபணை உண்டோ! அப்பெருமான் உண்டுபண்ணிய பிரோவினுல்தானே இவ்வளவு சீக்கிரமாக இவ்விடத்தில் எனக்கு வேலை கிடைத்தது. எனது நன்றி அவர்களுக்கு உரித்தாகுக. அவர்கள் என்றும் நீடூழி வாழ்க. இப்படிக்கு, சவரிராஜ் உபாத்தியாயர் என்று எழுதப்பட்டிருந்தது.

பின்னர் சில நாட்கள் சென்று நமது சரடைப் பூங்கொத்துப் பத்திராதிபருக்கு அனுப்பினேன். அதன் விபரங்களை அடுத்த மலரில் எதிர்பாருங்கள். (தொடரும்)

'கை' எழுதியது.

தம்பி, எங்கே பூங்கொத்து?

அப்பா, அதைப் ப்ரீலவர்வார்ஸில் வைத்து பீடத்தில் வைத்துவிட்டார்.

போதனுவிஷய பூங்கொத்துடா தம்பி.

இதோ என் கையில்.

விவசாயப்பகுதி

ராவ்பஹதூர் N. S. குழந்தைசாமி பிள்ளை

(ரிட்டயர்ட் விவசாய டிப்டி டைரக்டர்)

வேர்க்கடலைச் செடியை நாசம்செய்யும் கம்பளிப்பூச்சிகளை ஒழிக்கும் உபாயங்கள் எவை? என்று ஸ்ரீ K. கோபாலகிருஷ்ணன், (ராமநாதபுரம்) கேட்டுள்ள வினவின் விடை பின்வருமாறு :—

வேர்க்கடலையை நாசம்செய்யும் பூச்சிகளுள் கம்பளிப்பூச்சி என்று சொல்லப்படும் மயிருள்ள புழு ஒன்று. முதல் மழை பெய்தவுடன் இக்கம்பளிப்பூச்சிகள் சிறு வண்ணாத்திப் பூச்சிகளாகத் தரையிலிருந்து கிளம்பி வேர்க்கடலைச் செடிகளின் இலைகளில் நூற்றுக்கணக்கான முட்டைகளிட்டபின் மடிந்துபோகின்றன. இம்முட்டைகளிலிருந்து கம்பளிப்பூச்சிகள் கிளம்பி இலைகளைப் புசித்து பயிர்களை நாசமாக்குகின்றன. சிலநாட்கள் சென்றதும் அன்ன ஆகாரமின்றி இவைகள் மண்ணைத் துளைத்துக் கொண்டு வேறொரு உருவத்துடன் (hybernate) கிடக்கும். திரும்பவும் மழைபெய்ததும் வண்ணாத்திப்பூச்சிகளாகக் கிளம்பி இலைகளில் முட்டைகள் இட்டுவிட்டு மடிகின்றன.

இப்பூச்சிகள் கம்பளிப்பூச்சிப் பருவத்தில்தான் பயிர்களை நாசமாக்குகின்றன. ஆனால் இப்பருவத்தில் இவைகளை நாசமாக்குவது கூடாத காரியம். இவைகளை ஒழிப்பதற்கு முட்டைப் பருவம் அல்லது வண்ணாத்திப்பூச்சிப்பருவம்தான் ஏற்றது.

முதல்மழை பெய்த சமயத்தில் வெகு சுலபமாய் இந்த வண்ணாத்திப்பூச்சிகளைப் பிடித்து நாசமாக்கலாம். இவைகள் வெளிக்கிளம்பும்போது வேர்க்கடலை பயிரிட்டிருக்கும் எல்லாக் குடியானவர்களும் ஒன்றுசேர்ந்து சாயங்கால நேரத்தில் இருட்டினபின் அவரவர்கள் புஞ்செய்களில் பிரகாசமுள்ள விளக்குகளை வைத்து அவ்விளக்குகளினடியில் தட்டுகளில் தண்ணீர் ஊற்றிவைத்தால், பூச்சிகளெல்லாம் விளக்கைநோக்கி வந்து தண்ணீரில் விழுந்து இறந்துவிடும். விவசாயிகளெல்லாம் ஒற்றுமையாய்ச் சேர்ந்தால் மட்டும் இவ்வுபாயம் பலனளிக்கும் ; அல்லாவிடில் இருண்டுகிடக்கும் புஞ்செய்களிலிருந்து விளக்குப்பொறிகளை வைக்கப்பட்டிருக்கும் இடங்களுக்கு ஏராளமான பூச்சிகள் வந்து பொறிகளில் அகப்படாத பூச்சிகளால் அப்புஞ்செய்களுக்குச் சேதம் அதிகமாகும்.

ஆகவே எனது அநுபோகத்தில் மிக எளிதாக இந்த பூச்சிகளை அழிக்கும் உபாயம் முட்டைகளை நாசப்படுத்துவதே என்று அறிந்திருக்கிறேன். வேர்க்கடலை இலைகளில் இப்பூச்சிகள் முட்டைகளிட்டிருப்பதை நன்ருக அறியலாம். சிற்சில இலைகளில் மட்டுந்தான் முட்டைகள் இருக்கும். வெகு சொற்ப செலவில் சிறுவர்களையும் சிறுமிகளையும்கொண்டு முட்டைகளிருக்கும் இலைகளைப் பறித்து நெருப்பில் சுட்டெரித்துவிடலாம். இந்த யுக்தியினல் கண்டிப்பாய் கம்பளிப்பூச்சியினல் உண்டாகும் நாசத்தை நூற்றுக்கு 75 அல்லது 80 வீதம் குறைக்கலாம்.

விடுகவி

(M. Mariarethinam, H. M.)

மேகநிறங் கொண்டிருக்கு மழைபெய்யாது
விளையாடுஞ் சண்டைசெய்யுங் கைகாலில்லை
ஆகமதிலோடிருக்கும் ஆமையல்ல
அதிவெப்பம் பெறிற்———சீறும் சர்ப்பமல்ல
மாகணக்காளிகள் மதிப்பார் கணக்கனல்ல
வகிர்ந்தாலும் பலன்றரும்பூ தேவியல்ல
பாகமுத மேலாகப் பெறுநல்லோரே
பண்புடனிக்கவிக்கு விடை பகருவீரே!

யுக்திக் கணக்கு

(R. Ananthanarayanam.)

நாகப்பட்டிணம் எனும் ஊரில் உள்ள நிலத்தில்
நாலில் ஒருபங்கு நாற்றங்கால்;
எட்டில் ஒருபங்கு இடம் தரிசு;
பத்தில் ஒருபங்கு பனமரக்காடு;
பாதி பச்சை. விளைவுக்கு வந்தது
47 ஏக்கர் என்ருல் மொத்தம் ஏக்கர் எவ்வளவு?

சிறுவர் நடித்தலுக்கேற்ற ஓர் நாடகம்

(N. R. Thiruvengadam)

பாபரும், ஹுமாயூனும்

காட்சி 1

இடம்: ஆக்ரா நகரம்; பாபரின் அரண்மனையில் ஓர் அறை.

பாத்திரங்கள்: நோயாளி ஹுமாயூன், அரண்மனை வைத்தியன்.

ஹுமாயூன்: (வேதனையோடு) ஆ, ஐயோ! என்னால் தாங்க முடியவில்லையே! பாவா! தாங்களாவது அருகிலிருந்தால் எனக்கு ஒரு ஆறுதலாய் இருக்குமே! தாங்கள் இல்லாத சமயத்தில் நோய் அதிகரித்துவிட்டதே!! தாங்கள் வரும் வரையிலாவது என் உயிர் நிலைத்திருக்குமோ என்னவோ தெரியவில்லையே!!! ஐயோ!

அரண்மனை வைத்தியன்: இளவரசே! கலக்கம்வேண்டாம். இப்பொழுது சுரம் அவ்வளவு கடுமையாக இல்லை. பீஹாருக்கு ஆப்கானியாரை அடக்கச்சென்ற தங்கள் பிதா வெகு சீக்கிரம் வந்துவிடுவார். கவலைவேண்டாம்.

ஹுமா: (கோபமாக) சுரம் அதிகமில்லை! அதிகமில்லை! எப்பொழுதும் இப்படியேதான் சொல்லுகிறீர்! அதிகமில்லை என்பதற்கு என்னதான் அர்த்தமோ?

(சேவகன் ஒருவன் வருகிறான்.)

சேவகன்: இளவரசே! ஸலாம்! தங்கள் பிதா வந்துகொண்டிருக்கிறார். அதை முன்னால் தங்களுக்குச் சொல்லவே வந்தேன்.

ஹுமா: வந்துவிட்டாரா? எங்கே எங்கே? (படுக்கையிலிருந்து எழுகிறான்.)

காட்சி 2

இடம்: அரண்மனையில் ஹுமாயூன் நோயறை.

பாத்திரங்கள்: ஹுமாயூன், சகோதரர், அரச பிரதானிகள்.

(பாபர் பிரவேசம்.)

பாபர்: கண்ணே! ஹுமாயூன்! சுரம் எப்படி இருக்கிறது? சதா உன் நினைவாகவே இருந்தேன். அந்தப் பாழும் ஆப்கானியரின் தொல்லையால் அல்லவா உன்னைப் பிரிய நேர்ந்தது?

ஹுமா: பாவா! ஸலாம்! பீஹார் கலகம் அடக்கப்பட்டுவிட்டதா? சுரம், சுரம்—சுரம் இனி தணிவதாய் இல்லை! அது

உச்ச நிலையில் இரு...க்...கி...றது. (பேச்சுத்தடுமாறி கண் மூடுகிறான்).

பாபர்: ஆ! கண்மணி! நான் பாவி! மாபாவி! உன்னிடம் நன்றாக பேசவும் எனக்குப் பாக்கியமில்லையே! (இதர மைந்தரைப் பார்த்து) குழந்தைகாள்! உங்கள் அண்ணன் இருந்து ராஜ்யம் ஆள்வதைப் பார்க்க உங்களுக்குமா அதிர்ஷ்டம் பஞ்சையாகிவிட்டது? ஆ! நான் என்ன செய்வேன்? (தலையில் அடித்துக்கொள்கிறார்.)

சகோதரர்: பாவா! இது சமயம் அல்லாவைத் துதிப்பதைத் தவிர நாம் என்ன செய்யமுடியும்?

பாபர்: ஆம் அதுதான் வழி! (மண்டியிட்டு) அல்லா! கருணைகரா! மகானுபாவா! தங்கள் சோதனையை என்னால் சகிக்க இயலாது! தங்கள் பெருமை துலங்க மொகலாய ராஜ்யத்தை அரும்பாடுபட்டு ஸ்தாபித்தேன்! அந்த ராஜ்யத்தை ஆள இருந்த இளங்குமாரனை அபகரிக்கப் பார்க்கிறீர்?' கிழவனாகிய நான் இருப்பது தங்களுக்கு ஞாபகமில்லைபோலும் நபிநாயகமே! நான் உயிர் தரியேன்! அந்த நோய் எனக்கு வருமாறு கிருபை புரிக! கிருபைபுரிக! இது தங்களால் முடியாத காரியமா? பிஸ்மில்லா! பிஸ்மில்லா! பிஸ்மில்லா! (தியானத்தில் ஆழ்கிறார்.)

காட்சி 3

இடம்; அரண்மனையில் ஹுமாயூன் நோயறை.

பாத்திரங்கள்: ஹுமாயூன், பிரதானிகள் சிலர்.

(பாபர் நோயால் வருந்துகிறார்.)

ஹுமா: பாவா! இச்சிறியவனுக்காக தங்கள் உயிர் அர்ப்பணமா? தங்கள் வலிமைமுன் எனது கோழைத்தனம் எங்கே? அற்பனாகிய எனக்காக தாங்கள் உயிரை விடுவதா? நான் போனால் ராஜ்யம் ஆள என் சகோதரர் இல்லையா? தாங்கள் போனால் எங்களுக்கு யாரிருக்கிறார்கள்?

பாபர்: அப்பா! ஹுமாயூன்! இப்படி பக்கத்தில் உட்கார்! நான் சொல்வதைக் கேள். ராஜ்யபாரம் வகிப்பது இலேசான காரியமல்ல! உன் சகோதரர் சிறு பிராயத்தினர்! மேலும் நாட்டில் எங்கும் குழப்பம் அதிகமாயிருக்கிறது! ஆகவே அவர்களால் இராஜ்யம் ஆள இயலாது! அதனாலேயே உனக்கு உயிர் கொடுத்தருளுமாறு அல்லாவை வேண்டினேன்! உனக்கு உயிரும் அளித்தார். எனக்கும் நான் வேண்டிய வரத்தை (நோயை)

அளித்தார். சகோதரரை நேசி! குடிகளிடம் அன்பாய் இரு! அல்லாவை நம்பு! என் வல்லமையை உனக்கும் அளிப்பார். எங்கே, மகிழ்ச்சியோடு எனக்கு விடை கொடு! (அல்லாவை துதித்தபடியே பாபர் விண்ணுலகடைகிறார்.)

பிரதானிகள்: இளவரசே! தங்கள் வீரத்தந்தை வீரசுவர்க்கம் அடைந்தார்! கவலையுறேல். அவர் மனமார அளித்த ஆசீர்வாதம் தங்களுக்கு இருக்கிறது. அவர் விருப்பப்படியே இஸ்லாம் மதம் தழைக்கப் பாடுபடுவோம். எல்லோருமாக தந்தைக்கு நற்பதவியளிக்குமாறு அல்லாவைத் துதிப்போம். (எல்லோரும் பாபர்முன் மண்டியிட்டு) அல்லா! பிஸ்மில்லா! உயர்குண வேந்தரை ரக்ஷிப்பீராக! ரக்ஷிப்பீராக!! ரக்ஷிப்பீராக!!!

செல்லம் எயிடெட் ஆசிரியர்களின் சங்கம்
உரத்தூர், தஞ்சாவூர் தாலூகா

(K. Desikan, Secretary.)

ஸ்ரீ டி. பி. செல்லசாமி அய்யர் அவர்களின் மானேஜ்மெண்டில் நடந்துவரும் உரத்தூர், மஹாராஜபுரம், துண்டராயன்பாடி, மார்நேரி முதலிய பாடசாலைகளிலுள்ள ஆசிரியர்களின் சங்கத்தின் முதல் ஆண்டுவிழா தஞ்சைவட்டம், கல்விக் கண்காணிப்பாளர் ஸ்ரீ டி. எஸ். கல்யாணசுந்தரம் பிள்ளையவர்களின் தலைமையின்கீழ் 1941-ம் வருஷம் ஜூலை மாதம் 29-ம் தேதி மாலை 5 மணிக்கு நடைபெற்றது.

அவ்வமயம் தலைவர் இம்மாதிரியான சங்கத்தின் அவசியத்தைப்பற்றியும் ஆசிரியர்களுக்கு இவ்விதச் சங்கம் எப்படிப் பயன்படும் என்பதைப்பற்றியும் ஆசிரியர்கள் தங்கள் ஊதியத்தை எதிர்பாராமல் உழைக்கவேண்டும் என்பதைப்பற்றியும் மிகவும் விரிவாக எடுத்துரைத்தார்.

பின்னர் ஷை சங்கத்தின் காரியதரிசியவர்களால் நன்றி கூறப்பட்டு கூட்டம் இனிது முடிந்தது.

பின்னர் உரத்தூர் பாடசாலையைச் சேர்ந்த செல்லம் விடுதி மாணவர்கள் கூட்டம் ஷை டிப்டி இன்ஸ்பெக்டர் அவர்களின் தலைமையின்கீழ் கூடிற்று.

தலைவர் விடுதி மாணவர்களுக்கு சில புத்திமதிகள் கூறினார். பின்னர் மேற்படி விடுதி வார்டன் அவர்களால் மாலை சூட்டப்பட்டு கூட்டம் இனிதுமுடிந்தது.

தென்னிந்திய முதியோர் கல்வி சங்கம்

(The South Indian Adult Education Association, Tuticorin)

இச்சங்கத்தின் தலைவர் திரு. J. L. P. Roche Victoria, M. L. A. (Municipal Chairman, Tuticorin) அவர்கள், திருநெல்வேலி ஜில்லா, மங்களகிரி கிராம அபிவிருத்தி சங்கத்தின் ஆதரவில் முதியோர் கல்வி தினக்கொண்டாட்டத்தைப் பற்றி (Adult Education Day) அனுப்பியுள்ள பின்வரும் செய்தியை மிக்க சந்தோஷத்துடன் இங்கு பிரசுரிக்கின்றோம்:

தூத்துக்குடி, St. Joseph's Institute, Rural Centre and Industrial Institute, இக்கலாசாலைகளின் ஆதரவின்கீழ் சென்ற ஜூலை-மீ 28-ம் உ முதல், ஆகஸ்டு-மீ 10-ம் உ வரை "ஆறுவது இந்திய கைத்தொழில் கண்காட்சி" (Sixth Indian Industrial Exhibition) நடைபெறலாயிற்று. அச்சந்தர்ப்பத்தில் ஆகஸ்டு-மீ 2-ம் உ சனிக்கிழமையன்று "முதியோர் கல்வி தினக்கொண்டாட்டம்" ஒன்றும் கொண்டாடப்பட்டது. அவ்வமயம் தூத்துக்குடி, அதன் சுற்றுப்புறம் முதலியவற்றைச் சேர்ந்த பற்பல முதியோர் கல்வி ஸ்தாபனங்களினின்று மாணவர்களும், ஆசிரியர்களும் ஷை கண்காட்சிசாலையின் பற்பல பகுதிகளையும் கண்டு களிக்குமாறு, அவர்கள் இலவசமாக வந்து பார்க்கும்படி அனுமதிக்கப்பட்டனர்.

அன்று மாலை 6 மணிக்கு ஷை கண்காட்சி ஸ்தலத்தில் சங். G. V. Ignatius Sama, S.J., அவர்களின் தலைமையின்கீழ் பொதுக்கூட்டம் ஒன்று நடைபெற்றது. தூத்துக்குடி முனிஸிபாலிடியைச் சேர்ந்த முதியோர் கல்வி ஸ்தாபனங்களில் பயின்று வரும் மாணவர்களில் மிக ஒழுங்குடனும், திறனோடும் வேலை செய்த மாணவர்கட்கு பரிசுகளும், யோக்கியதாபத்திரங்களும் (certificates) அவரவர் திறனுக்கேற்றபடி அளிக்கப்பட்டன. ஷை சங்கத் தலைவரும், கண்காட்சித் தலைவருமாகும் திரு. J. L. P. Roche Victoria அவர்கள் தமது பிரசங்கத்தில், தென்னிந்தியாவில் முதியோர் கல்வியை ஸ்தாபித்து, முன்னணி வேலைகள் செய்து, பொதுஜனக் கல்வியின்பொருட்டு அரிய சேவை புரிந்துவந்த காலஞ்சென்ற S. G. Daniel B.A. (M. E. S. Rtd.) அவர்கள் தஞ்சையில் சமீபத்தில் மரணமடைந்ததைப்பற்றி பிரஸ்தாபித்தனர். பின்னர் அக்கிராசனம் வகித்த சங். சுவாமியார் அவர்கள், நமது தாய்நாட்டில் அறிவின்மையாகிய இருள் நீங்கி, கல்வி ஒளி எங்கும் வீசி, அதனால் தேசம் முன்னேற்றமடைய வேண்டியதைப்பற்றி வெகு விமரிசையுடன் தமது பிரசங்கத்தை மிக உருக்கத்துடன் கூறிமுடிக்க, ஷை நகர கமிஷனர்

(Municipal Commissioner) திரு. U. N. Subbaraya Mudaliar, B.A. அவர்கள், சபாநாயகருக்கும், கண்காட்சித் தலைவருக்கும், ஏனையோர்க்கும் ஷை கல்விக் கமிட்டியின் சார்பாகத் தமது வந்தனத்தைத் தெரிவித்துக்கொண்டதோடு ஷை வைபவம் இனிது நிறைவெய்தியது.

ஷை கண்காட்சியில் "கல்விப்பகுதி" (Literary Stall) ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது. அதில் பொதுமக்களை முதியோர் கல்விமட்டில் ஆர்வம், ஊக்கம்கொள்ளுமாறு தூண்டவல்ல பலவித போதனை சாதனங்கள், படங்கள், நூல்கள், முதலிய பொருட்கள் காண்பிக்கப்பட்டன.

யோசனைக் கணக்கு விடைகள்

(George Sydney.)

(கொத்து 32, மலர் 2, பக்கம் 44.)

I		கிடைத்த பசு	அவை கறக்கும் வீதம்	கிடைத்த பால்
A.	$	4	2 படி வீதம்	8 படி பால்
	‡	1	$\frac{3}{4}$,,	$\frac{3}{4}$,,
	†	5	$\frac{1}{4}$,,	$1\frac{1}{4}$,,
		10 பசுக்கள்		10 படி பால்
B.	$	4 பசுக்கள்	2 படி வீதம்	8 படி பால்
	‡	1 ,,	$\frac{3}{4}$,,	$\frac{3}{4}$,,
	†	5 ,,	$\frac{1}{4}$,,	$1\frac{1}{4}$,,
		10 பசுக்கள்		10 படி பால்
C.	$	2 பசுக்கள்	2 படி வீதம்	4 படி பால்
	‡	8 ,,	$\frac{3}{4}$,,	6 ,,
		10 பசுக்கள்		10 படி பால்

Grand Total	$	2 படி வீதம் கறக்கும் பசு	10
	‡	$\frac{3}{4}$,, ,,	10
	†	$\frac{1}{4}$,, ,,	10

II. மரத்தில் பறித்த மாங்காய்கள் **6**

A பறித்தான் 2 பங்கு

B சும்மா இருந்தான் 1 பங்கு

மொத்தப் பங்கு 3

1 பங்குக்கு $6 \div 3 = 2$

$\therefore$ A-க்குக் கிடைத்தது $2 \times 2 = 4$

$\therefore$ B-க்குக் கிடைத்தது $1 \times 2 = 2$.

A ஒன்றை B-க்கு கொடுத்தால் A-யினிடம் $4 - 1 = 3$ இருக்கும். B-யினிடம் $2 + 1 = 3$ இருக்கும்.

i.e. $= \quad 6 \div 3 = 2$

$$\left. \begin{array}{l} 2 \times 2 = 4 - 1 = 3 \\ 1 \times 2 = 2 + 1 = 3 \end{array} \right\} \text{ இரண்டும் சமம்.}$$

ஷை விடைகளை யளித்த மற்றவர்கள் :

Mrs. Ponnammal, Assistant Mistress, Manoothur. K. Srinivasan. K. Rayappan. A. Devanesan. S. Viagula Jesuvadian. S. Gnanapragasam. K. Mariaselvam. M. Santhiagu. S. Arputhasamy (Old Student). S. Fernandez, Labour School, Neikuppei.

சத்திய போதினி

ஒரு உயர்தர மாதாந்தர தமிழ் சஞ்சிகை

மாதிரி பிரதி இனும்

நானுவித விஷயங்கள் : தற்கால அரசியல் நிலை, வேத விஷயங்கள், சிறு கதைத் திரட்டுகள், உலக நவீனங்கள், சுகா தாரப் பகுதி, மாதர் பகுதி முதலியன அடங்கிய ஒரு மாத சஞ்சிகை.

சந்தா விவரம்

உள் நாடு	... ரூ.	1—0—0
வெளி நாடு	... ரூ.	1—6—0

விலாசம் :

சூப்பெரின்டென்டெண்டு,
சேயின்ட் ஜோசப்ஸ் இண்டஸ்ட்ரியல் ஸ்கூல் பிரஸ்,
திருச்சிறுப்பள்ளி.

நம் பாடசாலை நிகழ்ச்சிகள்

9-8-41. இன்று மாலை எம் பாடசாலை சபாமண்டபத்தில் கல்வி படக்காட்சி (Educational Film Show) நிகழலாயிற்று. அப்போது நீர்வீழ்ச்சியின் சக்தி; தற்போது நடைபெறும் ஐரோப்பியப் போரில் நமது தேசம் புரிந்துவரும் உதவிகள்; கடல் ஆபத்துகளினின்று தப்பும் உபாயங்கள் முதலியன சம்பந்தமான அரிய படங்கள் காட்டப்பட்டன.

12-8-41 to 15-8-41. இப்பாடசாலை கத்தோலிக்கு மாணவர்களின்பொருட்டு **வருஷத் தியானம்** கும்பகோணம் மேற்றிராசனக் குருவாகிய சங். அம்புரோஸ் சுவாமி அவர்களால் நடத்தப்பட்டது. அவ்வமயம் சங். சுவாமியார் அவர்கள் நம்முடைய பற்பல கடமைகளைப்பற்றி வெகு அழகியதோர் பிரசங்க மாரி பொழிந்தனர். திவ்வியபலி பூசைக்குப் பிறகு அர்ச். **பாப்பானவர்** ஆசீர்வாதத்துடன் ஷெ தியானம் இனிது முடிந்தது.

அன்னை அமல உற்பவி பரலோக இராக்கினியாக முடிசூட்டப்பட்ட தினமாகிய ஆகஸ்டு மாதம் 15-ம் தேதி வெள்ளிக்கிழமையன்று எமது ஆசிரிய மாணவரெல்லோரும் வெகு குதூகலத்தோடு இப்பெருநாளை ஓர் பொன்னாளாகக் கொண்டாடினார்கள்.

அன்று காலை $5\frac{1}{2}$ மணிக்கு திவ்விய பாடற்பூசை நிறைவேறியது. அதன்பின் எம்மில் சிலர் வெகு ஆடம்பரத்துடன் தேவதாய் சபையில் சபை அங்கத்தினராக தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அன்றையதினம் எமது அகத்தாரனைவரும் அதிசயிக்கத்தக்க மேரையாய் எமது சபாமண்டபத்தே அமைந்த நாடக மேடையில் பரிசுத்த தேவதாயின் சிறந்ததோர் சுரூபம் வெகு அலங்காரத்தோடு சிங்காரிக்கப்பட்டிருந்தது. அன்று பகல் போஜனம் அருந்தியபின் தாம்பூலமும் அளிக்கப்பட்டது. அதன்பின் எமது கழக சங்கீத கோஷ்டியினரால் பஜனையும் நடத்தப்பட்டது.

எமது அகத்தே ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் அர்ச். தேவமாதா சபையின் வருடாந்தரக் கூட்டம் அன்று பிற்பகல் சரியாக 2 மணிக்கு எமக்கு வருடாந்தர ஞானஒடுக்கம் கொடுத்தருளிய சங். அம்புரோஸ் சுவாமியவர்களின் தலைமையின்கீழ் ஆரம்பமாயிற்று. அவ்வமயம் வருடாந்தர ரிப்போர்ட் வாசிக்கப்பட்டது. அதன்பின் பரிசுத்த தேவதாயின்மேல் பாடல்களும், வியாசங்களும், சொற்பொழிவுகளும் எமது ஸீனிய, ஜூனிய ஆசிரிய மாணவர்களால் நிகழ்த்தப்பட்டன.

கடைசியாக அக்கிராஸனாதிபதியவர்கள் எழுந்திருந்து பேசத்தொடங்கினார்கள். அதில் அவர்கள் கூறியதாவது:

"முன்னே வாசித்த வருடாந்தர சபை ரிப்போர்ட்டுக்கிணங்க சபையானது வெகுவாக முன்னேற்றமடைந்துவந்திருக்கிறது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்குகிறது. இன்னும் இச் சபையானது அதிகமாக விருத்தியடைய நான் வெகுவாக ஆசிக்கிறேன். இதற்கு உங்கள் அயரா உழைப்பும், பள்ளிக்கூட அபிமானமும், ஆசிரியராகப்போகிற நீங்கள் உங்கள் கடமைகளைச் சரிவரச் செய்வதில் சிறிதும் தவறுமையுமே அவசியம்" என்று இன்னும் சில சிறந்த புத்திமதிகளை எடுத்தோதினர். இறுதியாக இவைகளுக்கெல்லாம் ஆதிகாரணராயிருந்து உங்களை நல்வழியில் செலுத்தி புத்தியிலும் ஞானத்திலும் வளர்க்க அயராது முயற்சிசெய்து உழைத்துவருகின்ற **Rev. Fr. A. Lourduswami, B.A., L.T.** அவர்கள் உங்கள் கழக மானேஜரும், ஹெட்மாஸ்டருமாக நீங்கள் அடைந்துள்ளது உங்களது பாக்கியமென்றே சொல்லவேண்டும் என்று கூறி அன்னவருக்குத் தமது நன்றியறிதலையும் தெரிவித்துக்கொண்டு தமது சிறந்த சொற்பொழிவை முடித்தார். கடைசியாக எங்கள் டைரெக்டர் சுவாமியவர்கள் Vote of Thanks கூற பரிசுத்த பாப்பாண்டவர் வாழ்த்துதலோடு கூட்டம் இனிது முடிவடைந்தது.

19–8–41. இன்று மாலை மந்திர, ஜாலவித்தை விநோதங்கள் நடைபெறலாயிற்று. இதை எமது மாதிரிப் பாடசாலைப் பிள்ளைகளும், மாணவ ஆசிரியர்களும் கண்ணுற்று வியந்தனர்.

25–8–41. இன்று எமது மாணவர்கள் வழக்கம்போல் போதனைப் பயிற்சியின்பொருட்டுப் பிற பாடசாலைகளுக்குப் போதிக்கச் சென்றனர்.

தூரிபுஷ்டத்தில் போதினி, பூங்கொத்து தினம்

11—8—'41

10–8–1941 காலை 'சத்தியபோதினி,' 'போதனை விஷயப் பூங்கொத்து' இவ்விரு பத்திரிகைகளும் நன்கலங்கரிக்கப்பட்டு ஊர்வலமாய் வந்தபின் பொதுக்கூட்டம் நடைபெற்றது. பலர் ஷெ பத்திரிகைகளைப்பற்றி பேசினர். விழா ஞாபகமாய் சங். லூர்துசுவாமிகள் புட்பால் டீமில் மேச் வெற்றி பெற்றோருக்குப் பரிசும் அளிக்கப்பட்டது. சங். சூசை ரேஜிஸ் இராப் பாடசாலை மாணவர்களுக்கு டீபார்டி நடைபெற்றது. சகலருக்கும் சுவாமி படம் அளிக்கப்பட்டது.

பாலர் ஸங்கீதம்

A. Gnanadickam, *Music Teacher*,
St. Joseph's Higher Elementary School, Ootacamund.

(கொத்து 32, மலர் 2, பக்கம் 56.)

*சிபிச்சக்ரவர்த்திக் கதை : நீதிபோதனை : ஜீவகாருணியம் :
பாட்டுடன் கதை கற்பித்தல் : வகுப்பு 4, 5.*

21. பருந்து அரசனை நோக்கி :— இப்புருவை என்னிடம் கொடுக்க உமக்கு மனம் இல்லாவிடில், உமக்கு நான் ஓர் உபாயம் சொல்லுகிறேன். அதையாவது செய்யும் என்று சொல்லி :

பாட்டு 29. (ஸ்ரீகர கருணா) ஆதி.

கா , ம கரிஸாரிஸ நீ ; பாநிஸ ரீ,ரி கமகரி ஸா ; ஸஸகம
ரா , ஜ தே. கச. தை ; ராஜ. ராஜே ! எனக்களிப்பீர் ; புருஇடை
பா,ம கரிஸாரிஸ நீ ; பாநிஸ ரீ,ரி கமகரி ஸா ; ; ;
ரா,ஜ தே. கச. தை ; ராஜ. ராஜே ! எனக்களிப்பீர் ; ; ;

அ. ப. : ,ஸாஸ காகக ,பாம பாகக ,ககக கமபத மபமப கா ;
,தாசன் என்மன ,ஆவல் தீருமே ,தயவு செய்.குவீர் நீ.ரு. மே ;

22. புரு எடைக்குச் சரியாயுள்ள உமது தேக சதையை எடுத்து எனக்குத் தந்தால் அதைப் பெற்று யான் திருப்தி அடைவேன் என்றது.

23. அதிக சந்தோஷத்துடன் அரசன் தராசின் ஓர் தட்டில் தன் சதையை அரிந்துவைத்து மற்றோர் தட்டில் புருவை வைத்தான்.

24. புரு எடைக்குச் சரியாய் இல்லாமல் சற்று உயர்ந்திருக்க அரசன் பின்னும் சிறிது தேகசதையை அரிந்துவைத்தான். இவ்விதம் பன்முறையும் செய்தும் பயனில்லை எனக் கண்டான்.

25. புருவின் தட்டு கீழும் சதையுள்ளது மேலும் இருக்கக் கண்ட அரசனும் பிரஜைகளும் துக்கசாகரத்தில் மூழ்கினார்கள்.

26. அரசன் வெகுநேரம் யோசனைசெய்து, கடைசியில் தானே அத்தட்டில் ஏறி உட்கார இரு தட்டுகளும் சமமாக நின்றன.

27. அந்தக்ஷணமே ஆகாயத்தினின்று பூமாரியும் பொன்மாரியும் பொழிய நகரமாந்தர் அனைவரும் அதிசயித்தனர்.

28. பல பெரியார் வேந்தனை ஆசீர்வதித்தனர். கடவுள் அனுக்ரகத்தால் சிதைவுண்ட சரீரம் முன்போல் யாதொரு குறைவுமின்றி வஜ்ர சரீரமாக மாறினது. அரசனும் மேலான பதவியை அடைந்தான்.

29. அற்பப் பிராணியாகிய ஒரு பறவையின்பொருட்டு தன் உயிரையே மதிக்காத சிபிச்சக்கரவர்த்தியின் ஜீவகாருணியம் நம் ஒவ்வொருவர் மனதிலும் நன்கு பதியவேண்டும்.

பாட்டு. இராகம்: கல்யாணி. (சரவணபவா) ஆதி.

பல்லவி

; ரீ காபா காரீ ஸா; ; ஸா ரீகா ஸாரீ கா;
; ஜீ வ கா ருணி ய; ; சிந் தைகொள் வோ.ம்கண் யம்;

; ரீ காபா காகரி ஸா; ; பா ஸ்ாஸ்ா நீதா பா;
; ஜீ வ கா ருணி. ய; ; சிந் தைகொள் வோம்.கண் யம்;

; ரீ காபா காகரி ஸா; ; பா ஸ்ாஸ்ா நிஸ்தநி பா;
; ஜீ வ கா ருணி. ய; ; சிந் தைகொள் வோ.ம்கண் யம்;

அனுபல்லவி

; கா காபா தாநீ ஸ்ா; ; ஸ்ா ஸ்ாஸ்ா நிஸ்தநி பா;
; தா வும்மன் னுயி ரை; ; தன் னுயிர் போ.ல்எ.ண்ணி;

; நீ நீஸ்ா ர்ீ ர்ீ க்ா; ; ர்ீ க்ாப்ா க்ாரிக் ஸ்ா;
; தா வும்மன் னுயி ரை; ; தன் னுயிர் போல்எ.ண்ணி;

; ஸ்ா ஸ்ாநீ ; தா பதநீ; ; த நிஸ்ரி ஸ்ா; ;;
; பூ வில்சித் ர வ.தை; ; இ . . . . . .

; ஸ்ா ஸ்ாநீ ; தா பதநீ ; பா தபகா ; ரீ ஸரிகா
, பூ வில்சி ; த்ர வ,தை ; பு ரி'யா ; நாம் வா.ழ்வோம்....
ஜீவகா...

(முற்றிற்று.)

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
18229
சென்னை-600 008

எலிமெண்டரி பாடசாலைகளுக்கு எற்ற
சங்கீத பாட புத்தகங்கள்

1. பால சங்கீத வாசகம் முதல் 3 வகுப்பு மாணவர்களுக்கு ... 0—4—6
2. பால சங்கீத வாசகம் ஆசிரியர்களுக்கு ... 0—6—6
3. கர்னடக சங்கீத போதினி (முதல்பாகம்) ஆசிரியர்களுக்கு... 0—6—0
4. கர்னடக சங்கீத போதினி (2-ம் பாகம்)
1 முதல் 5 வகுப்பு கிறீஸ்துவ மாணவர்களுக்கு ... 0—6—0
5. கர்னடக சங்கீத போதினி (3-ம் பாகம்)
6 முதல் 8 வகுப்பு கிறீஸ்துவ மாணவர்களுக்கு ... 0—6—0

விலாசம்: **A. GNANADICKAM,**
South Indian Music School, St. Thomas Church Rd.,
OOTACAMUND.

ஸ்டார் பிராண்ட்

சீயக்காய் பவுடர், இங் பவுடர்

இவைகளுக்கு சகல ஊர்களுக்கும்
ஏஜெண்டு தேவை

விபரங்களுக்கு $1\frac{1}{4}$ அணு ஸ்டாம்புடன் எழுதவும்:
மெஸ்மரிக் ஹோம்,
தூத்துக்குடி.

வேலையில்லாதவர்களுக்கும், ஒழிந்தநேரத்தில்
வேலை செய்யப் பிரியப்படுகிறவர்
களுக்கும் வேலை கொடுக்கப்படும்.
விபரங்களுக்கு 2 அணு
ஸ்டாம்புடன்
எழுதவும்.

மெஸ்மரிக் ஹோம்,
தூத்துக்குடி.

Reg. No. M. 1354.

போதனு விஷய பூங்கொத்து காரியாலயம்

பழைய சஞ்சிகைகள்

பூங்கொத்து வருஷ இதழ்களை ஒன்ருகச்சேர்த்து உபாத்திமார்களுக்கும், பாடசாலைகளுக்கும் எப்பொழுதும் உதவும்வண்ணம் புத்தகமாக பையிண்டிங் செய்து அநேகர் வைத்துக்கொள்ளுகிருர்கள். அன்னவர்கள் பழைய தனி சஞ்சிகைகள் தேவையானபோது, பிரதி ஒன்றுக்கு ஒன்றரை அணு வீதம் அனுப்ப வேண்டும். எங்களிடம் எல்லாப் பிரதிகளும் அகப்படா. வேண்டிய பத்திரிகைகளின் எண்ணைக்குறித்து அனுப்பினுல் தேடிப்பார்த்துக் கிடைத்தால் அனுப்புவோம்.

சந்தா நேயர்கள்

பூங்கொத்து காரியாலயத்திற்கு மணியார்டர் செய்யும் அன்பர்கள் தயவுசெய்து தங்கள் முழு விலாசத்தையும், சந்தா எண்ணையும் தெளிவாகக் கூபனில் எழுதினுல் நலமாக இருக்கும். அவ்வாறு எழுதாமையால் பலவித அசௌகரியங்கள் நேர்கின்றன.

விலாச மாறுதல்கள்

சந்தா நேயரில் சிலர் தங்கள் விலாச மாறுதலை முதலில் தெரிவியாமல் பத்திரிகை கிடைக்கவில்லை என்று எழுதுகிருர்கள். விலாச மாறுதலை 10-ம் தேதிக்குள் தெரிவிப்பது நலம்.

பத்திராதிபர்.

Printed by Rev. Fr. A. Susai Regis,
Superintendent, St. Joseph's Industrial School Press, Trichinopoly.